# ஓட்டமாவடி அறபாத்தின் 'மூத்தம்மா' சிறுகதையில் வெளிப்படும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டுக் கூறுகள்

**Subaraj,N.**

*Dept. of Languages, Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka*
*subaraj84@yahoo.com*

***ஆய்வுச்சுருக்கம்***

*கிழக்கிலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களுள் ஓட்டமாவடி அறபாத் முக்கிய இடத்தைப் பெறுபவர். குறிப்பாக தற்கால சிறுகதை எழுத்தாளர்களில் இவரின் படைப்புக்கள் சமூகத்தை பிரதிபலிப்பனவாக இருக்கின்றன. பிறந்த இடமாகிய ஓட்டமாவடியையே தன் பெயரின் அடைமொழியாகக் கொண்டு ஆக்கங்களைப் படைக்கும் ஓட்டமாவடி அறபாத் கிழக்கு மாகாணத்தின் பண்பாடுகளை செம்மையாகவும் எளிமையாகவும் எடுத்துக்காட்டுவதில் வல்லவர். அந்தவகையில் அவரது சிறுகதைகளுள் ஒன்றான "மூத்தம்மா" எனும் சிறுகதை வெளிப்படுத்தும் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாடுகளை அடையாளப்படுத்துவதும் அவை ஏனைய பிரதேச முஸ்லிம் மக்களிடமிருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளன என்பதை இனங்காண்பதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும்."மூத்தம்மா" எனும் சிறுகதை சமீபகாலமாக பிரபல்யமடைந்து வரும் ஒரு படைப்பாக உள்ளது. 2014ஆம் ஆண்டு முதல் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கு இச்சிறுகதை ஒரு பாடமாக இணைக்கப்பட்டுள்ளமையே இதற்கு முக்கிய காரணமாகும். கிழக்கிலங்கை முஸ்லிகளின் மத்தியில் உள்ள பண்பாடுகளை இதில் பல இடங்களில் தொட்டுக் காட்டுகின்றார் அறபாத். இப்பண்பாடு கிழக்கிலங்கை முஸ்லிகளுக்கு மட்டும் உரித்தானதாகவே காணப்படுகின்றது. இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்கள் அறியாத பல வழமைகளையும், சொற்பிரயோகங்களையும் அறபாத் வெளிப்படுத்தியுள்ளார். இது அவருக்கே உரித்தான பாணி. எடுத்துக்காட்டாக, இச்சிறுகதையின் தலைப்பாக அமையும் மூத்தம்மா எனும் சொல் பாட்டியைக் குறிக்கும். மூத்தம்மா எனும் சொல்லின் பொருள் தொடர்பாக ஏனைய பிரதேச முஸ்லிம்களிடம் கேட்டபோது அவர்களுள் பெரும்பாலானோர் அச்சொல் பாட்டியையே குறிப்பிடுகின்றது என்பதை அறியாதிருந்தனர். மேலும், சகுணம் பார்த்தல் போன்ற நம்பிக்கை சார்ந்த விடயங்களையும் கதைக்கேற்ற விதத்தில் எடுத்துக்காட்டும் அறபாத்தின் மொழிநடையே கிழக்கிலங்கையின் மண்வாசனையை பிரதிபலிப்பதாகவுள்ளது. இவ்வடிப்படையில் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களுக்கிடையே நிலவும் தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளை இச்சிறுகதை வெளிப்படுத்த முனைகின்றது என்பது இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றது.இச்சிறுகதையில் இடம் பெறும் பண்பாட்டுக் கூறுகளை கிழக்கிலங்கைப் பண்பாட்டுக் கூறுகளுடன் இணைத்து உண்மைத் தன்மையை ஆராய்வது இவ்வாய்வுக்கு வலு சேர்க்கும் என்ற அடிப்படையில் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாடு தொடர்பாக ஓட்டமாவடி பிரதேச மக்களிடம் சென்று பெறப்பட்ட நேர்காணல் தரவுகள் இவ்வாய்வின் முதனிலைத் தரவுகளாக அமைந்தன. இவ்வாறான தரவுகளைப் பெறுவதற்கு 50 மாதிரிகள் (எழுமாற்று முறையில் அமைந்த மாதிரிகள்) தெரிவு செய்யப்பட்டன. மாதிரிகள் அனைவரும் கிழக்கிலங்கையைச் சேர்ந்த, அதிகமாக ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் மக்களாவர். இரண்டாம் நிலைத் தரவுகளாக, பண்பாடு, கிழக்கிலங்கை பண்பாடு தொடர்பான நூல்கள், கட்டுரைகள் என்பன பயன்பட்டன.முடிவாக, ஓட்டமாவடி அறபாத்தின் "மூத்தம்மா" சிறுகதை குடும்ப உறவுகளின் தூய்மையை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்த முனையும் ஒரு படைப்பு. இருப்பினும் கிழக்கிலங்கையின் தனித்துவமான வழமைகளையும் நம்பிக்கைகளையும் செம்மையாக அடையாளங்காட்டும் ஒரு ஆக்கமாகவும் அமைகின்றது.* ***திறவுச் சொற்கள்**: ஓட்டமாவடி அறபாத், மூத்தம்மா, பண்பாடு*

## 1.1 அறிமுகம்

கிழக்கு இலங்கையின் ஓட்டமாவடி பிரதேச சிறுகதை ஆசிரியரான அறபாத்தின் 'மூத்தம்மா' என்ற சிறுகதையானது கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களின் வாழ்வியல் அம்சங்களை பிரதிபலிப்பதாக அமைந்த ஒன்றாகும். இச்சிறுகதையை கதையாசிரியர் பாசத்தையே மூத்தம்மாவின் இழப்புடன் தொடர்புபடுத்தி நகர்த்தி செல்கிறார். இதனோடு இணைந்த வகையிலேயே கிழக்கு இலங்கை முஸ்லிம் மக்களின் பண்பாட்டு அம்சங்களை இச்சிறுகதை பிரதிபலிக்கின்றது.பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவு பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில் சார் தெரிவுகள், கருவிகள் போன்றவையும் பண்பாட்டுக்குள் அடங்கும்.**(James, Paul, (2015), Urban Sustainability in Theory and Practice: Circles of Sustainability, p. 53.)**

'பண்பாடு' எனும் போது 'குறித்த இனமோ சமூகமோ தனது அறிவாலும் அனுபவத்தாலும் சிந்தனைத் திறத்தாலும் தனக்கெனப் பேணிவரும் செயற்பாடு'**(பக்தவத்சல பாரதி: பண்பாட்டு மானிடவியல், ப. 127)** எனப் பொருள் கொள்ளலாம். இவ்விளக்கத்தின்படி ஒவ்வொரு இனத்தவருக்கும் சமூகத்தவருக்கும் வெவ்வேறு வகையிலான பண்பாட்டு நடைமுறைகள் காணப்படும். இதனை சமயநெறி, தத்துவம், அழகியல் உணர்வு, குறிக்கோள்கள் என பலவும் வலுசேர்க்கின்றன.

இனங்கள் ஒன்றாக இருப்பினும் அவர்களுக்கிடையில் சிறிய அளவிலேனும் பண்பாட்டு சார் வேறுபாட்டினை அவதானிக்கலாம் இதனை 'மூத்தம்மா' சிறுகதை மெய்ப்பிக்கின்றது. அதாவது முஸ்லிம் மக்கள் இலங்கை முழுவதிலும் பரவலடைந்து வாழ்கின்ற போதிலும் கிழக்கு வாழ் முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்கள் வேறுபட்டே விளங்குகின்றது. அத்தகைய அம்சங்களை அடையாளப்படுத்தி விரிவாக இக்கட்டுரை நோக்குகின்றது.

## 1.2 ஓட்டமாவடி அறபாத்

கிழக்கிலங்கையில் ஓட்டமாவடி முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசம். ஓட்டமாவடி அறபாத் இப்பிரதேசத்தில் 1970 ஆம் வருடம் பெப்ரவரி 17ஆம் திகதி முஹம்மதலியார் சாகுல் ஹமீது, நாகூர் லெப்பை மர்யம் பீவி ஆகியோர்க்கு மகனாக பிறந்தார். ஆரம்ப பாடசாலைக்கல்வி ஓட்டமாவடி முஸ்லிம் வித்தியாலயத்திலும் பின்னர் அக்கரைப்பற்று மன்பஉல் கைறாத் அறபுக்கல்லூரியில் அறபு மொழியில் ஷரீஆக்கல்வி கற்றார். பின்பு 1985 இல் அட்டாளைச்சேனை கிழக்கிழங்கை அறபுக்கல்லூரியில் இணைந்து கல்வி கற்றார். அங்குதான் இவரின் எழுத்தாற்றல் கூர்மையாக்கப்பட்டது..மௌலவி முஹம்மது பாகவி என்ற ஆசிரியரின் ஊக்கமும், உற்சாகமும் அவரை எழுதத் தூண்டியது.**(http://oddamavadi-arafath.blogspot.com)**

1991 இல் பாலமுனை ஸஹ்வா அறபுக்கல்லூரியில் மௌலவி அல்ஆலிம் பட்டம் பெற்று அதே ஆண்டில் கிழக்குப்பல்கலைகழகத்திற்கு தெரிவானார். இருந்த போதிலும் நாட்டின் சூழ்நிலை அவருக்கு அங்கு செல்ல முடியாத சூழலை தோற்றுவித்தது. 1993 இல் தென்கிழக்கு பல்கலைக்கழகம் அங்கு வந்து கல்வியைத்தொடர அழைப்பு விடுத்த போதிலும் அவரது குடும்பத்தில் நிலவிய பொருளாதாரம் செல்ல விடவில்லை. இருப்பினும் பேராதனை பல்கலையில் வெளிவாரி மாணவனாக இணைந்து பட்டப்படிப்பை முடித்தார்.

### 1.3.1 ஓட்டமாவடி அறபாத்தின் படைப்புக்கள்

இலக்கிய உலகில் ஓட்டமாவடி அறபாத் ஓர் சிறுகதையாளனாகவும் கவிஞராகவும் இனங் காணப்படுகின்றார்.

1. பிரசுரம் பெற்ற முதல் கவிதை - "பூவொன்று சிரிக்கிறது
2. பிரசுரம் பெற்ற முதல் சிறுகதை - "விருந்தாளிகள்"

இவரது படைப்புக்கள் பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அல்ஹசனாத், எழுச்சிக்குரல், பாமிஸ், நேசன், தாரகை, வான்சுடர், தினமுரசு, தினக்கதிர், படிகள், களம், மித்திரன், சிந்தாமணி, உதயம், படிகள், சரிநிகர், ஆதவன், தினகரன், மீள்பார்வை, எங்கள் தேசம், வீரகேசரி, தினக்குரல் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கன.**(நேர்காணல்)**

இலக்கிய படைப்புக்கள் விபரம்

1. எரி நெருப்பிலிருந்து (1996)
2. தப்லீக் அன்றும் இன்றும் - சமய விமர்சனம்(1998)
3. த.ீலீம் தொகுப்பு குர்ஆனுக்கு எதிரானதா ? - சமய விமர்சனம்
4. நினைந்தழுதல் (1998)
5. இஸ்லாமும் சர்வமதக்கோட்பாடும் (1999) (ஆய்வு)
6. ஆண் மரம் - சிறுகதைத்தொகுதி
7. சூபித்துவத்தின் உண்மை நிலை - மொழி பெயர்ப்பு (2001)
8. வேட்டைக்குப்பின் - கவிதைத்தொகுதி (2004)
9. ஈமானின் கிளைகள் - கட்டுரைகள் (2005)
10. நினைவின் முட்கள் - அரசியல் கட்டுரைகள் (2007)
11. உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி - சிறுகதைத்தொகுதி (2008)

### 1.3.2விருதுகளும் பரிசில்களும்

1. 1994 - சரிநிகர் நடாத்திய வானமே எல்லை சர்வதேச சிறுகதைப்போட்டியில் "வேப்ப மரம்" சிறுகதைக்கு விருது

2. 1995 - விபவயின் சுதந்திர இலக்கிய விழா கவிதைக்கான விருது
3. 1995/1996 - விபவியின் சுதந்திர இலக்கிய விழா சிறுகதைக்கான விருது
4. 1995 - மக்கள் சமாதான இலக்கிய விழா சிறுகதைக்கான விருது (அவனும் மனிதன்தான்)
5. 1996 - தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கவிதைக்கான விருது
6. 1996 - தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிறுகதைக்கான விருது
7. 1996 - இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் விருது (சுமை தாங்கிகள்)
8. 1998 - விபவியின் சுதந்திர இலக்கிய விழா விருது ("நினைந்தழுதல்" - சிறுகதை தொகுதி)
9. 2002 - தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் பரிசும் விருதும் ("ஆண்மரம்" - சிறுகதைத்தொகுதி)
10. 2008 - கிழக்கு மாகாண சபை இலக்கிய விருது ("உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி"சிறுகதைத்தொகுதி) அதே ஆண்டில் இலங்கை அரசின் சாஹித்ய மண்டல பரிசுக்குரியதாக தெரிவு செய்யப்பட்டு சான்றிழ் பெற்றது.

ஊஞ்சல் கட்டி ஆடுதல் சிங்களவர்களுக்கே உரிய பண்பாகும். தமிழ் சிங்கள புத்தாண்டு பண்டிகையின் போது சிங்களவர் மத்தியில் ஊஞ்சல் கட்டி ஆடுதல் முக்கிய நிகழ்வாக இடம்பெறுகின்றது. இவ்விளையாட்டு கிழக்கிலங்கை தமிழர்களிடமும் அதிகம் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இது கிழக்கிலங்கை முஸ்லிம்களிடமும் இருப்பதை இச்சிறுகதை கொண்டு அறியலாம்.

(உ-ம்)"மூத்தம்மா வரும் வரை நான் பந்தலின் கீழ் தொங்கின ஊஞ்சலில் இருந்தேன்"**(மூத்தம்மா சிறுகதையிலிருந்து)**

கிழக்கிலங்கைக்கப்பால் முஸ்லிம்கள் ஊஞ்சல் விளையாட்டை பெரிதும் அறியாதவர்களாகவே இருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.எனவே 'ஊஞ்சல் ஆடுதல்' எனும் விளையாட்டு கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான பண்பாடாகவே இங்கு அடையாளங் காணலாம்.

பழங்காலத்து மக்களின் வாழ்க்கை நடைமுறைகளில் மூடநம்பிக்கைகள் அதிகமாகவே செல்வாக்கு செலுத்தின. இதனை மூடநம்பிக்கைகள் எனக் குறிப்பிடுவதை விட சம்பிரதாயங்களும் வழமைகளும் எனக் குறிப்பிடலாம். கிழக்கிழங்கை வாழ் மக்களிடமும் குறிப்பாக முஸ்லிம் மக்களிடமும் இத்தகைய சம்பிரதாயங்களும் வழமைகளும் இருந்துள்ளதை மூத்தம்மா சிறுகதை மெய்ப்பிக்கின்றது.

அலரும் ஆந்தையை விரட்டுவதற்கு இவர்கள் கையாலும் வழிமுறை கொண்டு இதை அறியலாம். நெருப்பு தணலில் உப்பினை தூவுவதன் மூலம் உண்டாகும் வெடிப்பு சத்தத்தில் ஆந்தை பறக்கும் என நம்புகின்றனர்."ஒரு சிரட்டையில் நெருப்புத் தணலை நிறைத்துக் கொண்டு வெளியே வந்தா

பந்தலின் கீழிருந்து உப்பினை தூவினா. பட்பட்டென பெரும் சப்தத்துடன் வெடித்தது"என ஆசிரியர் குறிப்பிடுவதனூடாக இதனை உணர முடிகின்றது.

அதுபோல் ஆந்தை அலரினால் ஊரில் அல்லது உறவினரின் மரணம் சம்பவிக்கும் என்ற நம்பிக்கையை கிழக்கு முஸ்லிம்கள் கொண்டிருந்ததை இச்சிறுகதை பறைசாற்றுகின்றது."நம்ம ஊருக்க குடும்பத்துக்க ஆராவது மவுத்தாப் போரதுக்கு அடையாளம் என்டு சொல்லுவாங்க அது தான் இந்தப் பல்குல் வாசலுக்கு வாசல் கேவித் திரியுமாம்."என மூத்தம்மா பாட்டி தன் பேரனுக்கு குறிப்பிடுவதை இங்கு எடுத்துக் காட்டலாம்.

நேர்த்தி வைக்கும் மரபு என்பது உண்மையில் முஸ்லிம் மக்களின் வழமையில் இல்லை. ஆனால் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான பண்பாக இந்நேர்த்தி வைக்கும் வழமை இருப்பதை சிறுகதை ஆசிரியர் வெளிப்படுத்த தவறவில்லை.மூத்தம்மா தனக்கு குழந்தை பிறப்பதற்கு நேர்த்திக்கடன் வைத்துள்ளதை,
(உ-ம்)
"அதுவும் பல நேர்த்திக் கடன் கொடுத்து பிறந்தது என பழைய நினைவில் தோய்ந்து இருப்பா."
"ஒரு ரூபாய் குற்றியை வெள்ளைத் துணியில் சுற்றிக் கட்டி உச்சிவட கவ்து அவுலியாவுக்கு நேர்த்தி வைத்தார்."**(மூத்தம்மா சிறுகதையிலிருந்து)**

முதலிய கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றன.

ஏதேனும் நோய் ஏற்படும் போது நாட்டு மருத்துவம் செய்து கொள்வதும் இம்மக்கள் மத்தியில் காணப்பட்ட பண்பாட்டு அம்சமாக கருதலாம். கிழக்கிலங்கைக்கே உரித்தான நாட்டு மருத்துவங்கள் உண்டு. அவற்றின் தன்மைகளை அனுபவ ரீதியாக அறிந்திருந்த பல மூதாதையர்கள் அங்குள்ளனர். அத்தகையவர்களில் ஒருவராக மூத்தம்மா காட்டப்படுகின்றார்.
(உ-ம்)
"காய்ச்சல் மனெ நீ கடக்கி ஓடிப்போய் ஊறல் பக்கட் வாங்கி வா"
"சந்தனம் அரைத்து உச்சந்தலையில் பூசினார்."
"இத்தனைக்கும் ஒரு நோய் வந்தா படுக்கையில கிடந்து அழுந்தவுமாட்டா. ஆஸ்பத்திரி என்று அலையமாட்டா. ஆடாதோடையும் கொத்தமல்லியையும் அவித்து குடித்து எழுந்து நடக்குறா."**(மூத்தம்மா சிறுகதையிலிருந்து)**

தற்காலத்தில் தாய்மார்களுக்கான பிரசவம் வைத்தியசாலைகளிலேயே இடம் பெறுகின்றன. ஆனால் சில காலங்களுக்கு முன்பு வீட்டிலேயே பிரசவம் இடம் பெற்றுள்ளன. பிரசவம் பார்ப்பது பெரியோரைக் கொண்டு நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்ந்துள்ளது.இதனை இச்சிறுகதையில் கண்டு கொள்ளலாம்.

(உ-ம்)

"கைராசிக்காரி நீங்கள் தான் மாமி என்ற தலப் புள்ளய ஏந்தனும் நேற்றும் அவ்வா ரத்தா வீங்கிய வயிற்றுடன் வந்து மூத்தம்மாவிடம் சொல்லிவிட்டு போனா."**(மூத்தம்மா சிறுகதையிலிருந்து)**

நகை அலங்காரங்களில்கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்களுக்கென தனித்துவமான போக்கு உள்ளது.முற்காலங்களில் ஒவ்வொரு நகைக்கும் வெவ்வேறான பெயர்களையும் சூட்டியிருந்தனர். இதனை மூத்தம்மா சிறுகதையும் புலப்படுத்துகின்றது.

(உ-ம்)

"மூத்தம்மாவின் காதில் பெரிய தோடுகள் மேலிருந்து கீழாக நேர்வரிசையில் தொங்கி கொண்டிருக்கும்."அது **'அல்லுகுத்து'** என்பர். அல்லுகுத்து என்பது பழங்காலத்து பெண்கள் காதில் அணியும் பெரிய தோடு.

"கழுத்தில் **கருகமணிமாலை** சதா மின்னிக் கொண்டிருக்கும்."

"கையில் **அகல செம்புக் காப்புகளென**….."**(மூத்தம்மா சிறுகதையிலிருந்து)**

கிழக்கிலங்கை நீர்வளம், நிலவளம் நிறைந்த பிரதேசமாதலால் பண்டைய காலந்தொட்டு கால்நடை வளர்ப்பு இங்கு சிறப்பாக இடம் பெற்று வருகின்றது. கிராமமோ நகரமோ வீட்டுப் பிராணிகளை வளர்ப்பது இப்பிரதேச மக்களின் வழமையாக உள்ளது. இச்சிறுகதை,மிருக வளர்ப்பும் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களிடையே செல்வாக்கு பெற்றுள்ளமையை எடுத்துக் கூறி கூறி அம்மக்களின் பண்பாட்டினை செம்மை படுத்தியுள்ளது.

(உ-ம்)

"கோழிக் கூட்டினுள் சலசலப்புக் கேட்டது."

"கொல்லைப் புறத்தில் கட்டியிருக்கும் மாடுகள்………"**(மூத்தம்மா சிறுகதையிலிருந்து)**

கிழக்கு இலங்கை முஸ்லிம் மக்களின் தனித்துவமான பேச்சு வழக்கினை இக்கதையில் காணலாம்.

(உ-ம்)

- மனெ-மகன்
- மூத்தம்மா-பாட்டி
- பெரியவாப்பா-தாத்தா
- பல்குல-ஆந்தை
- அல்லுகுத்து-காதணி
- மவுத்து-இறத்தல்

இவற்றுள் 'மூத்தம்மா" என்பது பாட்டியை குறிக்கின்றது. இச்சொல் கிழக்கு இலங்கை மக்களுக்கே உரித்தான ஒன்றாகும். இலங்கையின் பிற பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களிடையே பாட்டியை மூத்தம்மா என அழைக்கும் வழமை இல்லை. இச்சொல்லையே ஆசிரியர் தனது சிறுகதையின் தலைப்பாக இட்டுள்ளமை ஆசிரியரின் மண்வாசனை மீதுள்ள ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

**முடிவுரை**

இலக்கியம் என்பது காலத்தையும் சமூகத்தையும் பிரதிபலிப்பதாக இருத்தல் முக்கியமானதாகும். இத்தகைய இலக்கியங்களே மக்கள் செல்வாக்கை பெறுகின்றன. அந்தவகையில் அறபாத்தின்'மூத்தம்மா' என்ற சிறுகதையானது கிழக்கு முஸ்லிம் மக்களின் பண்பாட்டு அம்சங்களை அழகுற வெளிப்படுத்தியுள்ளது எனலாம். கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டு சார் அம்சங்களான பேச்சுவழக்கு, உடைகள், நம்பிக்கைகள், மரபுகள், வழக்காறுகள் என்பவற்றின் தனித்துவங்களை என்றும் தொட்டுக் காட்டும் ஆவணமாக இச்சிறுகதை மிளிரும்.

உசாத்துணை நூல்கள்:


1. ஓட்டமாவடி அறபாத்,மூத்தம்மா (சிறுகதை),இணையத்தளம்
2. உதுமான் ஷாஹிப், எம், வை, 2006, கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள், முகம்மது அப்ரார் வெளியீட்டகம்.
3. ஓட்டமாவடி அறபாத், இணையத்தளம்
4. றமீஸ் அப்துல்லாஹ், 2001, கிழக்கிலங்கை கிராமியம், மல்லிகைப் பந்தல் வெளியீடு.
5. வாகரைவாணன், 2006, கிழக்கில் ஒரு கிராமம், ஆரணியகம்